# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.221/2024

நாள்: 09.06.2026

வா.சா. 1 – ஜானகி

2026–ம் ஆண்டு ஜுன் 09–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தற்காலிகமாக குடியிருப்பதற்காக ஆஷ்பெட்டாஷ் சீட்போட்டு கொட்டகையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆஷ்பெட்டாஷ் சீட்போட்ட வீட்டில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். ஆஷ்பெட்டாஷ் சீட்போட்ட இடத்தின் பழைய சர்வே எண்.168/2 புதிய சர்வே எண்.168/15 என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5–ன் சர்வே எண்.168/15 குடியிருப்பதாக கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.168/15 அதில் உள்ள கதவு எண்.92/3–ல் குடியிருப்பதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக அந்த இடத்தில் குடியிருக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையில் கண்ணன் எல்லைக்கு மேற்கில் இருந்து நான்கெல்லை சொல்லியுள்ளேன். கண்ணன் அப்பா பெயர் தங்கவேல். கண்ணன் மனைக்கு மேற்புறம் இரத்தினசாமி பாக மனை இருந்தது என்றாலும் அந்த இரத்தினசாமியின் மனையை தான் 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றாலும் அந்த இடத்திற்கு ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.175/2014–ல் IA.536/2014–ன் படி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளார் என்றாலும்

சரியல்ல. 1ம் பிரதிவாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்ற இடத்தை என்னுடைய இடம் என்று தவறான நான்கெல்லை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டுக்கு தென்புறம் உள்ள இடம் தனலெட்சுமி இடம். சொத்துவிவரத்தில் தென்புறம் தனலெட்சுமி மனை என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தவறாக நான்கெல்லை குறிப்பிட்டு சொத்து விவரத்தை போட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. என் கணவர் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் பணிபுரிகிறார் என்றால் இல்லை. என் கணவர் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் பணிபுரிகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுமை தூக்கும் சங்கத்தில் உறுப்பினராக உள்ளார். தா.பழூர் கிராம நிர்வாக அலுவலர் சிவக்குமார், என் கணவருக்கு பழக்கமா என்றால் தெரியாது. என் கணவரும் கிராம நிர்வாக அலுவலர் சிவக்குமாரும் நண்பர்கள் என்பதால் என் கணவர் பெயரில் உள்ள பட்டா எண்.776 மனைவரி பட்டா ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனைவரி பட்டாவில் உள்ள சொத்து விஸ்திரனம் என் கணவர் அனுபவத்திலோ உரிமையிலோ எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. அந்த பட்டாவின் அடிப்படையில் என் கணவர் எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள இதர ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் தாவா சொத்து என் கணவருக்கு கிரயம் மூலம் கிடைத்ததா, பூர்வீகமாக கிடைத்ததா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் தொடர் அனுபவத்தில் இருப்பதை காட்டக்கூடிய வாய்தா இரசீதுகள் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல.

எங்களுடைய அனுபவத்தையும் உரிமையையும் நிருபிக்கவில்லை என்றாலும் நான் கோரும் விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.